## பேலியகொடை மத்திய மீன் சந்தை கட்டிடத்தொகுதி முகாமைத்துவ நம்பிக்கை பொறுப்பு - 2021

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழி அபிப்பிராயம்

பேலியகொடை மத்திய மீன் சந்தை கட்டிடத்தொகுதி முகாமைத்துவ நம்பிக்கை பொறுப்பின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் மற்றும் பொழிப்பாக்கிய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நம்பிக்கைப்பொறுப்பின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றினது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் *நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்* பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒன்றித்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நம்பிக்கைப்பொறுப்பின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், பொருத்தமானவாறு அதனை வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது குழுமத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நம்பிக்கைப்பொறுப்பின் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நம்பிக்கைப்பொறுப்பு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளரின் பொறுப்புகள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நம்பிக்கைப்பொறுப்பின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நம்பிக்கைப்பொறுப்புக்கு உள்ள ஆற்றல் தொடர்பில்

குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் குழுமத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நம்பிக்கைப்பொறுப்பின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நம்பிக்கைப்பொறுப்பின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- நம்பிக்கைப்பொறுப்பு அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும் நம்பிக்கைப்பொறுப்பின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரித்தலுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| இணங்காமையுடன் தொடர்புடைய உரிய நியமம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 1,347,223 பெறுமதியான தளபாடம் பொருத்துக்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் முன்னைய ஆண்டில் முழுமையாகத் தேய்விடப்பட்டிருந்த போதிலும், அவை தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற மையால் பொதுத்துறை கணக்கீட்டு நியம இல. 7 | தளபாடம் பொருத்துக்களின் பயனுள்ள ஆயட்காலம் முடிவடைந்த பின்னர் அவற்றின் பெறுமதியில் அதிகரிப்பு காணப்படாமை யால் அவை மீள்மதிப்பீடு செய்து காண்பிக்கப்பட | முழுமையாகத் தேய்விடப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற சொத்துக்களை மீள்ம |

| | | |
|---|---|---|
| இலுள்ள 42 ஆம் பந்தியின் படி அச்சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்து கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வில்லை. | திப்பீடு செய்து கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு 5 சதவீத்தில் தேய்மானம் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், 2011 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த சுத்திகரிப்பு நிலையத்தை முழுமையாக புனரமைப்பதற்கு 2021 ஆம் ஆண்டில் ரூபா 114 மில்லியன் தொகைக்கு கேள்விமனு கையளிக்கப் பட்டிருந்தது. அதன்படி, சுத்திகரிப்பு நிலையத்தின் ஆயுட்காலம் 20 ஆண்டுகள் எனக் கொள்ளப்பட்டு 5 சதவீதம் தேய்மானம் செய்யப்பட்ட பின்னர், 10 ஆண்டுகளில் சுத்திகரிப்பு நிலையத்தை முழுமையாக புனரமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டதன் காரணமாக, பின்பற்றப்பட்ட தேய்மான கொள்கைகள் போதுமானதாக காணப்பட்டிருக்க வில்லை. | கொள்கையினைத் தீர்மானிக்கையில் ஆயுட்காலம் 20 ஆண்டுகள் எனக் கொள்ளப்பட்டு 5 சதவீதம் தேய்மானம் செய்வதென தீர்மானிக்கப்பட்டிருந்த சுத்திகரிப்பு நிலையத்தின் இயலளவு போதாமை மற்றும் பேணுகைச் செயற்பாடுகள் தடைப்பட்டதால் இந்த நிலை தோன்றியுள்ளது. | சொத்தின் ஆயுட் காலத்தை சரியாக நிச்சயித்து பின்பற்ற வேண்டிய தேய்வுக் கொள்கையை இனங்காண வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 ஒக்தோபர் மற்றும் திசெம்பர் மாதங்களில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 76,122,535 தொகையான குறுங்கால முதலீடுகள் மீது கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் ரூபா 1,202,714 ஆல் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | குறுங்கால முதலீடுகளிற்காக கிடைத்த மற்றும் கிடைக்க வேண்டிய வட்டிகள் குறிப்புகளில் காட்டப்பட்டுள்ளன. | கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் சரியாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) நம்பிக்கைப்பொறுப்பு உறுதியின் படி ரூபா 1,700,000,000 பெறுமதியான கட்டிடங்கள் 2010 ஆகஸ்ட் 10 ஆந் திகதி நம்பிக்கைப் பொறுப்புக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இருப்பினும், அந்தப் பெறுமதி ரூபா 1,688,741,540 எனக் கணக்கீடு செய்யப்பட் டிருந்தமையால் ரூபா 11,258,460 குறைத்து நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்ததுடன், அந்தப் பெறுமதிக்காக பெறுானத்தேய்வு கணிப்பிடப்பட்டிருக்கவில்லை. | நம்பிக்கைப்பொறுப்பு உறுதியில் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 1,700,000,000 எனக் காட்டப்பட்டுள்ளது. அதன்படி, நம்பிக்கைப் பொறுப்பு உறுதியில் அந்தப் பெறுமதி கிட்டிய பில்லியனுக்கு மட்டந் தட்டிக் காட்டப்பட்டுள் ளமையால் நிதிக் கூற்றுக்களில் கட்டிடங் களின் பெறுமதி சரியாகக் காட்டப்பட்டுள்ளது. | கட்டிடங்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் சரியாகக் காட்டப்படுதல் வேண்டும். |

### 1.5.4 கணக்கிணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | விடயம் | நிதிக்கூற்றுக்களின் படி பெறுமதி | நேரொத்த அறிக்கையின் படி பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | கடன்பட்டோர் | 76,577,311 | 77,222,311 | (645,000) | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள பெறுமதி சரியானது என்பதுடன் கடன்பட்டோர் காலப் பகுப்பாய்வில் அந்தப் பெறுமதி கழிக்கப்படுதல் வேண்டும். | நிதிக் கூற்றுக்களிற்கும் அறிக்கைளிற்கும் இடையே உள்ள பெறுமதி களை ஒப்பீடு செய்து வேறுபாட்டிற்கான காரணங்களை கண்டறிந்து சரியான பெறுமதியை கணக்கீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | பெறவேண்டிய கடை வாடகை வருமானம் | 7,110,807 | 15,212,466 | (8,101,659) | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | வாடகை வருமானம் | 98,073,755 | 94,502,088 | 3,571,667 | -மேற்படி- | -மேற்படி- |

### 1.5.5 கணக்காய்விற்காக எழுத்துருவிலான சான்றுகள் இல்லாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | விடயம் | தொகை | கிடைக்கப் பெறாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | சில்லறைக் காசுக் கொடுப் பனவுகள் | 750,111 | சிட்டைகள் | அந்தத் தகவல்களை வழங்குமாறு குறித்த உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். | சில்லறைக் காசு மூலமான கொடுப்பனவுகளிற்குரிய சிட் டைகள் கொடு ப்பனவு உறுதிச்சீட்டுக்களுடன் சமர்ப்பிக் கப்படுதல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | தற்காலிகமாக பிடித்துவைக்க ப்பட்ட வைப்பு கள் | 5,550,000 | மீதி உறுதிப்படுத்தல் ஆவணங்கள் | 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களிலும் கூட இந்த 3 வைப்பு மீதிகளிற் கான தனிப்பட்டோர் பட்டி யல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்தப் பட்டியல் தேவைப் படுகின்ற முறை குறித்த வடிவமொன்று வழங்கப்படு மாயின் அதற்கமைய தகவல்களை வழங்கக் கூடியதாக இருக்கும். | மீதிகளை உறுதிப்படுத் துவதற்கான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்ப தல் வேண்டும். |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய தொகைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முன்னைய ஆண்டுகளில் அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவையில் ரூபா 4,831,927 தொகையான மீதி அறவிடப் பட்டதாக பேரேட்டிலுள்ள வாடகை வருமானக் கணக்கில் காண்பிக்கப்பட் டுள்ள போதிலும், அதற்கான பட்டோலை கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக் காமையால் அறவிடப்பட்டோரின் விபரங்கள் மற்றும் நிலுவை மீதிகளை பரிசோதிக்க முடிந்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் இவ்வாறான பதிவேடொன்றை தயாரித்துப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறித்த பதிவேடு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | சமர்ப்பிக்கப்பட்ட கடன்பட்டோர் பகுப்பாய்வின் படி 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 03 ஆண்டுகளிற்கும் மேற்ப ட்ட காலமாக அறவிடப்பட வேண்டிய ரூபா 43,398,322 மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | நிலுவைக் கடன் மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குறித்த உத்தி யோகத்தர்களிற்கு அறிவுறு த்தல் வழங்கப்பட்டுள்ளது. | நீண்டகாலமாக அறவிடப்பட வேண்டியுள்ள மீதியை அறவிடு வதற்கு நடவடி க்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களு க்கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | அரசாங்க சேவை கள் ஆணைக் குழுவின் ஒழுங்கு விதிகள் I ஆம் | அரசாங்க உத்தியோகத்தர் ஒருவர் ஒரு பதவியில் பதிற் கடமை அப்படையில் அல்லது கடமைகளைச் செய்யும் அடிப்ப டையில் நியமிக்கப்படுகையில் | நம்பிக்கைப் பொறுப்பு க்கு முகாமையாளர் மற்றும் கணக்காளர் பதவிகளுக்கு | அரசாங்க சேவைகள் ஆணைக்குழு வின் ஒழுங்கு விதிகளின் பிர |

| | | | | |
|---|---|---|---|---|
| | தொகுதியின் IX ஆம் அத்தியாயத்தின் 120 ஆம் பந்தி | அவ்வாறு நியமிக்கப்படும் பதவி அவரது தற்போதைய பதவிக்கு சம அந்தஸ்தில் உள்ள பதவியாக அல்லது அந்தப் பதவியை விட உயர்ந்த பதவியாக இருத்தல் வேண்டும். இருப்பினும், நம்பிக்கைப் பொறுப்பின் கணக்காளரின் கடமைகளை பதிற்கடமை அடிப்படையில் நிறைவேற்றுவதற்காக கடற்றொழில் அமைச்சின் செயலாளரால் பிரதான கணக்காளர் நியமிக்கப்பட்டு மீளாய்வாண்டிற்காக நம்பிக்கைப் பொறுப்பால் ரூபா 360,000 செலுத்தப்பட்டுள்ளது. | புதிதாக ஆட்சேர்ப்பு செய்வதைக் காட்டிலும், கடற்றொழில் அமைச்சில் அப்பதவியை வகிக்கின்ற அமைச்சின் உத்தியோகத்தரை நியமிப்பதன் மூலம் அனுபவம் மிக்க வினைத்திறனான சேவையை பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் அதன் மூலம் குறைந்த கிரயத்தில் குறித்த சேவைகளை நிறைவேற்றுவதற்கு நம்பிக்கைப் பொறுப்பு க்கு முடிந்துள்ளது. | காரம் செயற்படுதல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| i | நிதிப்பிரமாணம் 261(1) | சகல கொடுப்பனவுகளும் காசுப் புத்தகத்திலும் அதனுடன் இணைந்த ஏனைய கணக்குப் புத்தகங்களிலும் உரியவாறு பதிவு செய்யப்பட்டு காசுப் புத்தகத்தின் பதிவுகளிற்கேற்ப தொடர் இலக்கம் இடப்பட்டு தொடர்புடைய உறுதிச் சீட்டுக்களிலும் அந்த இல்லகம் குறிக்கப்படுதல் வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், அதற்கமைய நம்பிக்கைப் பொறுப்பின் காசுப் புத்தகமும் உறுதிச்சீட்டுகளும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே நிதிப்பிரமாணம் 446(2) இன் பிரகாரம் கொடுப்பனவுகளிற்கு பொறுப்பான மேற்பார்வை அல்லது பதவிநிலை உத்தியோகத்தரால் காசுப் புத்தகத்தில் கையொப்பமிட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், நம்பிக்கைப் பொறுப்பின் காசுப் புத்தகத்திலுள்ள பதிவுகளும் மீதியும் சரியானது என உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | காசுப் புத்தகம் சரியாக தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| ii | நிதிப்பிரமாணம் 272(1) | அனைத்து கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்களும் அவற்றின் தொடர் இலக்கத்தின் படி தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்குத் தேவையான | கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் சரியாகத் தயாரித்து கணக்காய்விற்குச் சமர்ப்பி | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விடயங்கள் பூரணப்படுத்தப்பட்ட பின்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், நம்பிக்கைப் பொறுப்பி னால் 2021 ஆம் ஆண்டிற்கான உறுதிச் சீட்டுக்கள் அவற்றின் தொடர் இலக்கத்தின் படி தயாரிக்கப்பட்டு கணக்காய்விற் குத் தேவையான விடயங்கள் பூரணப்படுத்தப்பட்டு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | க்கப்பட்டுள்ளன. | |
| (இ) 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இல க்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 15.1 ஆம் பந்தி யால் உள்வாங்கப் பட்ட | | | |
| (i) நிதிப்பிரமாணம் 876(3) ஆம் பந்தி | நியதிச்சட்டமற்ற ஏதேனும் நிதியமொன்றை தொடர்ந்தும் பேணிச் செல்வதற்கு நியாயமான காரணம் இருப்பின் அவ்வாறான நிதியங்களை பாராளுமன்றச் சட்டமொன்றால் சட்டமாக்குவத ற்கு ஏற்ற வகையில் குறித்த காரணங்களைக் காண்பித்து பொது நிதித் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட வேண்டிய போதிலும், 2021 திசெம்பர் 31 வரை நம்பிக்கைப் பொறுப்பை பாராளுமன்றச் சட்டமொன்றால் சட்டமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அதற்குத் தேவைப் படும் குழுவொன்றை நியமித்து மேற்கொ ண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவ துடன் துரிதமாக அந்த நடவடிக்கை களை பூரணுப்படுத்து வதற்கு உத்தியோ கத்தர்களிற்கு அறிவு றுத்தல் வழங்கப்பட் டுள்ளது. | நிதிப்பிரமாணத் தின் பிரகாரம் பாராளுமன்றச் சட்டமொன்றா ல் சட்டமாக்கு வதற்கு நடவ டிக்கை எடுத் தல் வேண்டும். |
| (ii) நிதிப்பிரமாணம் 877(2)(ஈ) ஆம் பந்தி | குணக்காண்டு முடிவடைந்து 2 மாதங்களுக்குள் அந்தந்த நிதிக் கூற்றுக்களுடன் இணைத்து செயலாற்றல் அறிக்கையொன்று பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்துக்கான பிரதியொன்று டன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2021 இன் நிதிக் கூற்றுக்கள் 2022 மார்ச் 14 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருப் பினும், நிதிக் கூற்றுக்களுடன் இணைத்து செயலாற்றல் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப் படவில்லை. | கணக்காய்வாளர் தலைமை அதிபதி க்கு நிதிக் கூற்றுக் களை சமர்ப்பிக்கை யில் 14 நாட்கள் காலதாதமம் ஏற்பட் டது. | நிதிப்பிரமாணத் தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2010 ஆகஸ்ட் 10 ஆம் திகதிய நம்பி க்கை பொறுப்பின் உரித்துறுதி | | | |
| (i) | 6(அ) 1 ஆம் பந்தி | நம்பிக்கை பொறுப்பின் அனை த்து மிகை பணத்தையும் திறைசேரி உண்டியல்கள் மற்றும் அரச பிணைப்பத்திரங்கள் தவிர் ந்த வேறு வழியில் முதலீடு செய்வதற்கு திறைசேரியின் எடுத்துமூல முன்கூட்டிய இணக்க ப்பாடு பெறப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான இணக்க ப்பாடு இல்லாது நம்பிக்கை பொறுப்பு சபையின் தீர்மானத்தின் பிரகாரம் மாத்திரம் ரூபா 298,981,972 தொகை இலங்கை வங்கியிலும் சேமிப்பு வங்கியிலும் முதலீடு செய்யப்பட்டிருந்தது. | நம்பிக்கை பொறுப்பு சபையின் தீர்மானத் தின் பிரகாரமே நிலையான வைப்புக் களில் முதலீடு செய்யப்பட்டுள்ளதுட ன், அதன்மூலம் கட் டிடத் தொகுதியின் பேணுகை மற்றும் திருத்தங்களுக்குத் தேவையான நிதியை பெற்றுக் கொள்வ தற்கு இலகுவான வழிமுறை இது என்பதனால் அவ் வாறு செய்யப்பட்டு ள்ளது. | நம்பி க்கை பொறுப்பின் உரித்துறுதியி ன் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். |
| (ii) | புந்தி 7(அ) | வர்த்தக நிறுவனமொன்று தொடர் பாக அரசாங்கத்தின் பிரதான விலை மதிப்பீட்டாளரிமிருந்து பெற்றுக் கொள்கின்ற மதிப்பீ ட்டை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படுகின்ற வாடகை யை மொத்த மற்றும் சில்லறை வியாபாரிகளிடமிருந்து அறவிட வேண்டிய போதிலும், தற்போது அறவிடப்படுகின்ற ரூபா 40,000 மற்றும் ரூபா 10,000 வாடகை அந்த நிபந்தனைக்கு முரணாக இடம்பெறுகின்ற போதிலும், அதனைத் திருத்துவதற்கு 11 ஆண்டுகள் கடந்த பின்னரும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டி ருக்கவில்லை. | நம்பிக்கைப் பொறுப் பின் கட்டிடங்கள் தொடர்பில் விலை மதிப்பீட்டு அறிக்கை கிடைத்தவுடன் வர்த்தக நிலையங் களின் வாடகை களை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப் படும். | நம்பிக்கை பொறுப்பின் உரித்துறுதியி ன் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். |
| (iii) | பந்தி 7(உ) | நம்பிக்கைப் பொறுப்புக்குச் சொந் தமான 154 மொத்த வியாபார நிலையங்களையும் 128 சில் லறை வியாபார நிலையங்க ளையும் வானைக்கு விடுவதற் காக நம்பிக்கைப் பொறுப்பால் அங்கீகரிக்கப்பட்ட எழுத்துமூல நியதிகள் தயாரிக்கப்பட வேண் டிய போதிலும், அவ்வாறான நியதிகள் தயாரிக்கப்படாது 2011 ஆம் ஆண்டு முதல் 2021 வரை | சில்லறை வர்த்தக நிலையங்கள் 2011 முதல் முப்பது ஆண்டு குத்தகை அடிப்படையில் வழங் கப்பட்டுள்ளதுடன், அவற்றின் குத்த கைக் காலம் முடிவ டைந்த பின்னர் அக் காலப்பகுதியில் நில வுகின்ற பொருத்த | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கடைகள் வாடகைக்கு விடப்பட்டிருந்தன. | மான முறைக்கேற்ப கடைகள் வழங்கப் படுவதுடன் சில்லறை வர்த்தக நிலைய ங்கள் காத்திருத்தல் பட்டியலின் கீழ் வழங்கப்படுகின்றது. | |
| (iv) | பந்தி 7(க) | நம்பிக்கைப் பொறுப்பின் ஆதன ங்களைப் பாதுகாப்பதற்காக வழக்குத் தொடுப்பதற்கு அல்லது வழக்குகளின் போது வாதியின் தரப்பை பிரதிநிதித்துவம் செய்வ தற்கு முடியுமென குறிப்பிடப்ப ட்டுள்ள போதிலும், 2011 முதல் வாடகைக்கு வழங்கப்பட்டுள்ள 283 சில்லறை வர்த்த நிலையங் களிற்குரிய ரூபா 77,222,311 நிலுவை வாடகையினை அறவிடு வதற்காக வழக்குகளை தொடுப் பதற்குரிய சான்றுகளை நம்பிக் கைப் பொறுப்பின் வசம் வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நம்பிக்கைப் பொறுப் புக்குச் சொந்தமான வியாபார நிலைய ங்களின் மீது இது வரை வழக்குத் தொடுக்கப்படாததுட ன் மூன்று மாதங்க ளுக்கு மேல் நிலு வையிலுள்ள வர்த் தக நிலையங்கள் தொடர்பில் எழுத்து மூல மற்றும் வாய் மொழிமூல அறிவுப்பு கள் செய்யப்படு வதுடன் தொடர்ந் தும் நிலுவைகளை செலுத்தாதுள்ள கடைகள் தொடர்பில் நம்பிக்கைப் பொறுப் பாளரின் தீர்மானத் தின் படி நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | -மேற்படி- |
| (v) | 8(ஊ) ஆம் பந்தி | சம்பளம், கொடுப்பனவு அல்லது பரிசு பணமாக ஏதேனும் வேதனத்தை பெறுவதற்கு நம்பிக்கைப் பொறுப்பாளர்களு க்கு உரிமை இல்லையென்று குறிப்பிட்டிருப்பினும் அது தொடர் பாக கருத்திற் கொள்ளப்படாது நம்பிக்கை பொறுப்பு சபைக்காக முதலாவது நபர் என பெயரிடப் பட்ட நம்பிக்கை பொறுப்பு சபையின் தலைவரான கடற் றொழில் அமைச்சின் செயலாள ருக்கும் 14 உறுப்பினர்களிற்கும் மீளாய்வாண்டிற்காக ரூபா 870,000 தொகை மாதாந்த கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந் தது. | நம்பிக்கைப் பொறுப் பின் கூட்டங்களிற் காக பங்குபற்றுகின்ற உத்தியோகத்தர்கள் அவர்களது உழை ப்பு மற்றும் கால நேரத்தை செலவிடு வதாலும் போக்கு வரத்து அவர்களால் செய்து கொள்ளப் படுவதாலும் அந்த உத்தியோகத்தர்களு க்கு நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் அங்கீகாரத்தின் மீது மாதாந்தம் ரூபா 10,000 செலுத்தப்படு கின்றது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (உ) 2006 இன் கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 4.2.3 ஆம் வழிகாட்டல் | மீளாய்வாண்டில் ரூபா 114,590,885 செலவில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்கான கேள்விமனுக்களை மதிப்பிடும் நடவடிக்கைகள் 154 நாட்களிற்குள் செய்து முடிக்கப்பட வேண்டிய போதிலும், அதற்காக 17 மாதங்கள் அல்லது 518 நாட்கள் எடுத்துக் கொள்ளப்பட்டிருந்தமையால் தமது பொறுப்புகளை உரிய படி நிறைவேற்றியிருக்காமை அவதானிக்கப்பட்டது. | அந்த கொள்வனவு செயற்பாடுகள் மிகவும் சிக்கலானவையாக காணப்பட்டமையால் அதற்காக நீண்டகாலம் எடுத்துக் கொள்ளப்பட்டது. | கொள்வனவு வழிகாட்டல்கள் கோவை மற்றும் கொள்வனவு நடைமுறைகள் கோவை ஆகியவற்றின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். |

## 1.8 முதலீட்டு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தை புனரமைப்பதற்குரிய கொடுப்பனவுகளை செய்வதற்காக நம்பிக்கைப் பொறுப்புக்குச் சொந்தமான நிலையான வைப்புக்களை பிணையாக வைத்து இலங்கை வங்கியிடமிருந்து மீளாய்வாண்டில் ரூபா 100 மில்லியன் கடன் பெறப்பட்டிருந்த போதிலும், எதிர்பார்த்த நோக்கத்தை நிறைவேற்றாதும் நம்பிக்கைப் பொறுப்பாளரின் அங்கீகாரமின்றியும் அந்த மாதத்திலேயே அத்தொகையிலிருந்து ரூபா 76,122,535 தொகை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. இதனால் நம்பிக்கைப் பொறுப்புக்கு கிடைக்க வேண்டிய வட்டி இழப்பாகியிருந்ததுடன், ரூபா 100 மில்லியன் கடனிற்காக மேலதிகமாக 1 சதவீத வட்டி செலுத்தப்பட்டிருந்தது. | கடன் தொகையிலிருந்து செலவிடப்படாத தொகை தேவைப்படுகின்ற நேரத்தில் பெற்றுக் கொள்வதற்கு வசதியாக குறுங்கால முதலீடுகளில் வைப்புச் செய்யப்பட்டதுடன் கடன் பெறப்படாது ஒப்பந்தகாரர்களிற்கு பணம் செலுத்த முடியாதிப்பதுடன் கடனிற்காக செலுத்தப்படுகின்ற மேலதிக வட்டி இழப்பொன்று அன்றி அது செலவினமொன்றாகும். | வருமானத்தை ஈட்டுவதற்கும் இழப்புக்களை குறைத்துக் கொள்வதற்கும் நம்பிக்கைப் பொறுப்பு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 29,620,704 பற்றக்குறையொன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 40,748,886 ஆக காணப்பட்டதனால் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 70,369,590 பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டிற்கான வருமானம் ரூபா 52,186,792

ஆல் குறைவடைந்தும் நிர்வாகச் செலவினம் ரூபா 11,399,504 ஆல் அதிகரித்தும் இருந்தமையே நிதி விளைவுகளில் ஏற்பட்ட இந்த பின்னடைவிற்கு பிரதான காரணமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வர்த்தக கட்டிடத் தொகுதி ஸ்தாபிக் கப்பட்டுள்ள ரூபா 375,141,765 பெறுதியான 3.1776 ஹெக்டயர் விஸ்தீரணமுடைய காணியானது காணிகள் கையேற்புச் சட்டத்தின் கீழ் அரசாங்க பொறியியல் கூட்டுத்தாப னத்திடமிருந்து பெறப்பட்ட காணி யாகும். மேற்படி காணியை கையேற்பதற்காக அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் 2010 யூன் 03 ஆந் திகதி அங்கீகாரம் கிடைத் துள்ள போதிலும், காணியைக் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்தக் காணி நம்பிக் கைப் பொறுப்புக்கு கையேற்பட்டுள்ளது. | காணியைக் கையேற் பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு அதற்குரிய ஆவணங் களைக் கணக்காய் விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |
| (ஆ) | பதவியணியினர் அங்கீகரிக்கப்பட்டு ஏறத்தாழ 6 ஆண்டுகள் ஆன போதிலும், நம்பிக்கைப்பொறுப்பின் முகாமையாளர், கணக்காளர் மற்றும் உள்ளகக் கணக்காய்வாளர் பதவி களிற்காக 2021 திசெம்பர் 31 வரையிலும் ஆட்சேர்ப்புத் திட்டத்தை அங்கீகரித்துக் கொண்டு ஆட்ரேப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. | புதிதாக ஆட்சேர்ப்பு செய்வதைக் காட்டிலும், கடற்றொழில் அமைச்சில் அப்பதவியை வகிக்கின்ற அமைச்சின் உத்தி யோகத்தரை நியமிப் பதன் மூலம் அனுபவம் மிக்க வினைத் திறனான சேவையை குறைந்த கிரயத்தில் பெற்றுக் கொள்ள முடியும் என்பதனால் அவ்வாறு செய்யப்பட்டுள்ளது. | ஆட்சேர்ப்புத் திட்ட த்தை அங்கீகரித்துக் கொண்டு ஆட்ரேப்புச் செய்வதற்கு நடவ டிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | உணவகத்தை வாடகைக்கு விடுவ தற்காக கைச்சாத்திட்டிருந்த உடன் படிக்கையின் படி குறித்த வாடகையினை 3 மாதங்களிற்குள் செலுத்தாதிருப்பின், வாடகை உடன்படிக்கை செல்லுபடியாகாத போதிலும், ஏறத்தாழ ஒரு ஆண்டிற்காக அறவிடப்பட வேண்டி யுள்ள ரூபா 54,500,000 தொகை அறிவிடப்பட முடியாதுள்ளதுடன் வாடகை தாரரை அங்கிருந்து அகற் றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட் டிருக்கவில்லை. | இது தொடர்பில் மேலும் ஆய்ந்தறிந்து நடவடி க்கை எடுக்கப்படும். | உடனபடிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஈ) நம்பிக்கைப் பொறுப்பை ஸ்தாபிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் படி ஒருவருக்கு ஒரு வர்த்தக நிலையத்தையே வழங்க முடியுமான போதிலும், வர்த்தகத் தொகுதியிலுள்ள 123, 124, 125, 126 மற்றும் 127 ஆம் இலக்க 05 சில்லறை வர்த்தக நிலையங்கள் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் அங்கீகாரமின்றி 2013 ஆம் ஆண்டு முதல் அக்ரோ லங்கா கம்பனிக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. | மூவருக்கு வர்த்தக நிலையங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் வைப்புப் பணம் வைப்பிலிடப்பட்டுள்ளது. | நம்பிக்கைப் பொறுப்பை ஸ்தாபிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் படி செயற்படுதல் வேண்டும். |
| (உ) 2011 ஆம் ஆண்டில் ரூபா 34 மில்லியன் செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் உரியவாறு செயற்படாமை காரணமாக 2008 பெப்ரவரி 01 ஆந் திகதிய 1534/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தியமைக்கப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க சுற்றாடல் சட்டத்தின் 23A பிரிவின் பிரகாரம் நன்னீர் நீர் மூலத்திற்கு விடுவிக்கப்பட முடியுமான கைத்தொழில் கழிவின் அதிகூடிய எல்லையை மீறி வர்த்தகத் தொகுதியினால் 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் மாத்திரம் 297,997 லீட்டர் நியமத்திற்கு முரணான கழிவுநீர் நீர் முலங்களிற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. | இது தொடர்பில் உரிய உத்தியோகத்தர்களிடமிருந்தும் பிரிவுகளிலிருந்தும் தகவல்களை பெற்று துரிதமாக பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாட்டின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். |

**3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 128 கடைத் தொகுதிகளுடன் கூடிய சில்லறை வியாபார கட்டிடத் தொகுதியிலுள்ள 64 கடைகள் 2012 ஆம் அண்டில் ரூபா 9,625,540 செலவில் மொத்த வியாபார ஸ்தளங்களாக மாற்றப்பட்டிருந்தன. கணக்காய்வுத் திகதியான 2021 திசெம்பர் 31 வரையிலும் அந்த கட்டிடத் தொகுதியிலுள்ள 128 வியாபர ஸ்தளங்களும் வர்த்தக நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்படாதிருந்ததுடன் வணிகத் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த வியாபார நிலையங்களில் வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு பல தடவைகள் முயற்சிகள் எடுக்கப்பட்டன. 2021 திசெம்பர் மாத இறுதியில் வர்த்தக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், அது வெற்றியளிக்கவில்லை. வாடிக்கையாளர்கள் இந்த பிரதேசத்திற்கு குறைந்த ளவிலேயே வருகை தருவதனால் வியாபாரிகள் இங்கு வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு பின்வாங்குகின்றமையால் மீண்டும் 2022 யூலை 05 ஆந் திகதி ஆரம்ப வியாபார நடவடிக்கைகளை தொடங்குமாறு அவர்களிற்கு அறவிக்கப்பட்டுள்ளது. | அனைத்து வியாபார நிலையங்களையும் வர்த்தக நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தி அதற்காக வணிகத்திட்டமொன்றும் தயாரிக்கப்படுதல் வேண்டும். |

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 1992 இன் நிதிப் பிரமாணங்கள் கோவையினை திருத்தியமைத்து வெளியிடப்பட்ட 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 15.1 ஆம் பந்தியினால் உள்வாங்கப்பட்ட நி.பி. 877(1)(இ) இன் பிரகாரம் ஆளுகைத் தரப்பினால் வருடாந்தம் பாதீடு தயாரிக்கப்பட்டு அதற்கு உரிய அமைச்சுச் செயலாளரினதும் அமைச்சரினதும் ஒப்புதல் பெறப்பட்ட பின்னர் நடப்பு நிதியாண்டின் செப்தெம்பர் 30 ஆந் திகதிக்கு முன்னர் பொதுத் திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக பொது நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கான பிரதியொன்றுடன் தேசிய பாதீட்டுப் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும், அதன் படி செயற்படாதிருந்ததுடன், நி.பி. 877(1)(இ) இற்கு முரணாக, அங்கீகாரிக்கப்பட்ட பாதீடு ஒன்று இன்றி மீளாய்வாண்டில் ரூபா 89,239,510 மொத்தச் செலவினம் நம்பிக்கைப் பொறுப்பால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பேலியகொட மத்திய மீன் சந்தைத் தொகுதிக்கு பராமரிப்பு உபகரணங் களை பெற்றுக் கொள்வத ற்கும் எழுது கருவிகளை கொள்வனவு செய்வத ற்கும் முகாமைத்துவச் சபைத் தலைவரின் அங்கீகாரத்தின் மீது செலவு செய்யப்பட்ட துடன், ஏனைய அனைத்து நடவடிக்கைளும் நம்பிக் கைப் பொறுப்பாளர் சபை யின் அங்கீகாரத்தின் மீது மேற்கொள்ளப்பட்டுள்ளன. | நிதிப்பிரமாணத்தின் ஏற்பாடுகளின் படி செயற்படுதல் வேண்டும். |